பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 06 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் கவலையளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்தை செயல்படுத்த 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் இடைக்கால நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

3. மத்திய அரசின் கர்ப்பிணி பெண்களுக்கான நலத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

4. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 30 பேர் உயிரிழந்தனர்.

5. ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் — அர்ஜூன் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<>>>>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் கவலையளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, குவைத் இளவரசர் ஷேக் **Meshal Al Ahmad**-துடன் தொலைபேசி வாயிலாக உரையாற்றிய அவர், மேற்காசிய பாதுகாப்பு நிலைமை குறித்து ஆலோசித்ததாக கூறியுள்ளார்.

குவைத் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்த பிரதமர், இது அந்நாட்டின் இறையாண்மைக்கு எதிரான செயல் என்று தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

குவைத் நாட்டில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்காக அந்நாட்டு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

லெபனான், ஈரான், காஸா பகுதிகளில் உடனடியாக போர் நிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் வணிக கப்பல்கள் பயணிக்க அனுமதிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்காசியா பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது என்றும், பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வுகாண முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டத்தை செயல்படுத்த 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் இடைக்கால நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடக்கப்பட உள்ள இந்த திட்டம் குறித்து மாநில அமைச்சர்களுடன் காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தை செயல்படுத்த அனைத்து மாநிலங்களும் தயாராக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

26 மாநிலங்கள் இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக கூறிய அவர், கர்நாடகா, தெலங்கானா, ஜார்கண்ட், மிசோரம்

மாநிலங்கள் விரைவில் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யும் என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டைவிட இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 40 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறிய திரு சிவ்ராஜ் சிங் சௌகான், மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

மத்திய அரசின் கர்ப்பிணி பெண்களுக்கான நலத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் பத்தாண்டு நிறைவு விழாவையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், கர்ப்பிணி தாய்மார்களுக்கு மருத்துவ பரிசோதனைகள், மருத்துவ நிபுணர்களின் சிகிச்சை ஆகியவை இத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் நலனுக்காக அரசு உறுதிபூண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் இந்த திட்டம் மூலம் கடந்த பத்தாண்டுகளில் லட்சக்கணக்கான தாய்மார்களின் சுகாதாரம் மேம்பட்டுள்ளதாக திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் சீதாபூரில் ராணுவ நிலத்தில் சூரிய மின்சார திட்டத்திற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல் முறையாக ராணுவ நிலத்தில் பெரிய அளவிலான சூரிய மின் திட்டத்தை செயல்படுத்த போவதாக தெரிவித்துள்ளது.

பசுமை எரிசக்தி, நிலையான வளர்ச்சி, புதுப்பிக்கதக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் தேசிய அனல்மின் கழகத்துடன் இணைந்து ராணுவ நிலங்களில் சூரிய மின்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது

<<<<<<<>>>>>>>

அரசு மின்னணு வணிகதளம் மூலம் மேற்கொள்ளப்படும் பொதுத்துறை கொள்முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு **Mihir Kumar** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மக்கள் பயனடையும் வகையில்

வெளிப்படைத் தன்மையுடன் நிர்வாகம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

அரசு மின்னணு வணிகதளத்தை பயன்படுத்தும் சிறு-குறு நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 12 லட்சமாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதில், மகளிர் தொழில்முனைவோர் எண்ணிக்கை 2 லட்சத்து 16 ஆயிரமாக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் அரசு மின்னணு வணிகதளம் மூலம், கொள்முதல் 93 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2016 ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி தொடங்கப்பட்ட அரசு மின்னணு வணிகதளம் மூலம், பொதுத்துறை நிறுவனங்களின் கொள்முதல் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், திறம்பட மேற்கொண்டு வருவதாக திரு **Mihir Kumar** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

விவசாயிகள் தங்களது வேளாண் விளைப்பொருட்களை ஆன்லைன் மூலம் விற்பனை செய்யும் தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தை மத்திய அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில், விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்யவும், எவ்வித இடைத்தரகர்கள் இன்றி விற்பனை செய்து லாபம் ஈட்டவும் இத்திட்டம் பெரிதும் பயனளிப்பதாக வேளாண் வணிக துணை இயக்குனர் திருமதி மெர்சி ஜெயராணி தெரிவிக்கிறார்.

***(Sound Byte — மெர்சி ஜெயராணி — 43 Sec.)***

மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம், தங்களுக்கு நல்ல லாபம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

***(Sound Byte — விவசாயிகள் — 30 Sec. )***

<<<<<<<>>>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 30 பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பொருளாதார அரசியல் பிரச்சினைகளை எழுப்பி ஒருங்கிணைந்த அவாமி குழு நடத்திய போராட்டத்தை கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.

ராவல்கோட், முசாஃபராபாத் உள்ளிட்ட இடங்களில் வன்முறை ஏற்பட்டதையடுத்து தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கானோர் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி, சாலைகளில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலுக்கு பிரிட்டன் உள்ளிட்ட உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

<<<<<<<>>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் — அர்ஜுன் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை **21-13, 21-13** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Arden Quan Lee — Stanley Xing** இணையை வென்றது.

-------------------

இலங்கை-ஏ அணிக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், **8** ரன் வித்தியாசத்தில் இந்தியா ஏ அணி வெற்றிபெற்றது.

**Dambulla**-வில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா ஏ அணி, **50** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு **277** ரன் எடுத்தது.

**278 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இலங்கை-ஏ அணி, 269 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**<<<<<<<<END>>>>>>>**